அண்ணா போற்றிய அன்பு நாவலர்

வெளியிடுபவர் :

புலவர்

இளஞ்செழியன் எம்.ஏ

தொகுப்பாசிரியர் :

("பேரறிஞர் அண்ணா கருத்து மணிகள்")

இந்த ஜூலை—11

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் புரட்சித் தலைவி ஜெயலலிதா அவர்கள்,

கைபுனைந்து இயற்றாக் கவின் மணிமேகலையாக —

மாண்புமிகு தமிழக முதல்வராகி — "ஆட்சியெனும் அமுத சுரபி"யைக் கையிலே தாங்கி, அன்புடன் இந்த நாட்டு மக்களை ஆளத் தொடங்கியவுடன், வந்திருக்கிற பிறந்தநாள் — மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களின் 72-வது பிறந்த நாளே ஆகும்!

இந்த ஜூலை 1 — மாண்புமிகு புரட்சித் தலைவி ஜெயலலிதா அவர்களின் சட்டமன்றம் தொடங்கிய நாள்!

இந்த ஜூலை 11 — மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களின் 72வது ஆண்டு தொடங்குகிற நாள்!

இந்த இரண்டு நாள்களையும் இணைத்துப் பார்க்கிற பொழுது — நினைத்துப் பார்க்கிற பொழுது நம் இதயத்துக்குள்ளே ஓர் இன்பம் ஏற்படுகிறது!

இந்த இணைப்பும் நினைப்பும், இன்னும் எண்ணற்ற ஜூலை பதினொன்றுகளை — இதே நிலையோடும் வெற்றி அலையோடும் — ஆட்சியோடும் புதிய மாட்சியோடும் — நடமாடும் பல்கலைக் கழகம் டாக்டர் நாவலர் அவர்களுக்கு ஈதல் வேண்டும் என்பதே என் விழைவாகும்; என் போன்றார் விழைவும் இதுவேயாகும்.

டாக்டர் நாவலர் அவர்கள், எங்கும் நிறைந்த இலக்கியம் போன்றவர். என்றும் மாறாத இலக்கணம் போன்றவர்.

பழகு தமிழைப் போன்றவர்.

பழகி விலகினும், விலகிப் பின் பழகினும், அதே பழகு தமிழைப் போல், பழகுபவர்; இளகுபவர்.

பழமை மறவாதவர், பண்பாடு துறவாதவர்.

"ஒருநாள் செல்லலம்
இருநாள் செல்லலம்
பலநாள் செல்லினும்
பலரோடு செல்லினும்
தலைநாள் போன்ற
விருப்பினன் மாதோ!"

— ஔவையின் இந்த அமுத மொழித் தலைவன் அதியமானைப் போன்றவர் நாவலர் !

குன்று பிறழினும் கொள்கை பிறழாதவர் நாவலர் !

என்று புறப்பட்டாரோ ஈரோட்டுப் பாசறைக்கு — அன்று தொடங்கிய அவரது இலட்சியப் பயணம் — இன்றும் அப்படித்தான் — இனி என்றும் அப்படித்தான் !

அரசியல் தட்ப வெப்பங்கள் மாறும் ! ஆனால், நாவலர் அவர்களின் கொள்கை அடிச்சுவட்டில் மாற்றம் இல்லை !

அரை வேக்காடுகள் அவரைப் புரிந்து கொள்வது கடினம் !

புரிந்துகொண்ட முழுவேக்காடுகளோ, அவரைப் புழுதியால் மூட முயல்வர் — அதுதான் உண்மை !

கொடுந் தன்னலவாதிகளுக்கே அவர் கொடுவாள் !

கொள்கைவாதிகளுக்கோ, அவர் ஒரு குற்றால அருவி !

'நாட்டின் பொதுநலம்' ஒன்றே — அவரின் நாத வீணை !

'நல்லோரின் நட்பே' — அவர் நாடும் தேன்பலா !

'பதவி ஒரு கடமை' என்று சாற்றுபவர் நாவலர் !

''பதவியே சுகம் எனல் மடமை'' என்று சாடுபவர் நாவலர் !

எனவேதான், பேரறிஞர் அண்ணா அவர்கள் நாவலர் அவர்களைப் பற்றி எடுத்துக் கூறியபோது,

எல்லாம் தெரிந்தவர் நாவலர் — ஆனால் ஏதும் தெரியாதவர் போல் இருப்பார்'' என்று கூறினார்.

பேரறிஞர் அண்ணா அவர்கள், தம் அரசியல் வாழ் நாளில், டாக்டர் நாவலர் அவர்களைப் போற்றியதைப் போல், புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களையும் போற்றினார்; பாராட்டினார்; புகழ்ந்து எழுதினார்.

ஒரு பக்கமல்ல — பல பக்கங்கள் — ஒரு முறையல்ல — பல முறைகள் !

இவர்கள் இருவரையும் ஏற்றிவைத்துப் போற்றிப் புகழ்ந்துரைத்ததைப் போல, வேறு யாரையும் பேரறிஞர் அண்ணா அவர்கள் போற்றியதில்லை ! புகழ்ந்ததில்லை !

பல காலங்களில் — பேரறிஞர் அண்ணா அவர்கள், டாக்டர் நாவலர் அவர்களைப் பற்றிப் போற்றிப் பாராட்டிப் புகழ்ந்து எழுதிப் பேசியவற்றையே "அண்ணா போற்றிய அன்பு நாவலர்" என்ற இந்தத் தலைப்பில் சிறிது சுருக்கமாக்கித் தந்துள்ளேன்.

தமிழக அரசு வெளியிட்டுள்ள "அண்ணா போற்றிய பெருமக்கள்" என்னும் நூலில், இதன் விரிவினை நீங்கள் காணலாம்.

இந்தச் சிறிய படைப்பை, இமயம்போல் உயர்ந்த டாக்டர் நாவலர் அவர்களின் 72-வது பிறந்தநாள் படைப்பாக — அவரின் திருமுன் படைக்கிறேன் !

விழாக்களிலே—தமது வயதிற்குப் பொன்னும்] மணியும் கண்ட நாவலர், இன்னும், முத்து, பவளம், வைரம், பிளாட்டினம், தாமிரம் போன்ற விழாக்களையும் வரிசையாகக் கண்டு வாழும் தமிழாய் அண்ணியார் விசாலாட்சி அவர்களுடன் என்றும் இளமையுடன் வாழ்ந்திருக்க நெஞ்சார வாழ்த்துகின்றேன்; வணங்குகின்றேன்.

என்றும் அன்புள்ள
—புலவர் இளஞ்செழியன்

அண்ணா போற்றிய அன்பு நாவலர்

நடமாடும் தமிழ்—நாவலர்

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலேதான் நான் நெடுஞ்செழியனைக் கண்டேன்.

உங்களில் பலரும் பார்த்திருப்பீர்கள் — நல்ல வேளை — அவருடைய துணைவியார் கண்டதில்லை என்று எண்ணுகிறேன், தாடியுடன் நெடுஞ்செழியனை!

தமிழ் எப்படி எப்படிப் பேசுவதற்குரியது— இலக்கியம் பேச்சுடன் கலந்து வரும்போது எத்தகைய இன்பமளிக்கும் என்றெல்லாம் நான் பலமுறை எண்ணிப் பார்த்ததுண்டு—மனத்திலே உருவெடுத்துக் கொண்டிருந்த அந்த என் ஆசை நடமாடக் கண்டேன், தோழர் நெடுஞ்செழியன், கழக மேடையிலே பேசத் தொடங்கியதும்!

நாவலரின் அருங்குணம்!

என்னிடம் இல்லாத ஓர் அருங்குணம் அவரிடம் உண்டு — கண்டிருப்பீர்கள்!

ஓயாது உழைப்பது — எப்போதும் எங்கேயும் எதையாவது செய்து கொண்டே இருப்பது!

பொதுப் பிரச்சினைகளைப் பற்றி, தோழர் நெடுஞ்செழியன் எப்போதும் காரியம் ஆற்றிக் கொண்டே இருக்கும் இயல்பினர். நேரம் வீணாகி விட்டது என்று கூறத்தக்க போக்கிலே அவர் இருந்ததை நான் கண்டதே இல்லை.

இந்த இயல்பு, கழகத்துக்குப் பெருந்துணை அளிக்கும் என்பதைக் கூறத் தேவையில்லை!

சிறையில் மூன்று திங்கள் இருவரும் ஒரே அறையில் தங்கி இருந்தோம் — அங்கு என்னவென்று கருதுகிறீர்கள் ?

பலப்பல 'கனவுகள்' — விழித்தபடி நான் கண்டு கொண்டிருப்பேன்.

அவர் ? — வேலை ! வேலை ! வேலை ! ஏதாவது செய்தபடி இருப்பார்.

இந்த அருங்குணத்தை நாம் நன்றாகப் பயன்படுத்திக் கழகத்தை மேன்மையுறச் செய்து கொள்ளவேண்டும்.

பெரியாரால் கூடக் குறைகாண முடியாதவர் !

தோழர் நெடுஞ்செழியனைப் பெரியார் தமது மேற் பார்வையில் வைத்திருந்து பார்த்தார். அவரால் யார் மீதும் குற்றம் காண முடியும் ! ஆனால் தோழர் நெடுஞ்செழியனிடம் அவராலும் ஒரு குறைகூடக் கண்டறிந்து கூற இயலவில்லை ! அத்தகைய பணியாளர் நமக்குக் கிடைத்திருக்கிறார் ! அவருக்குக் கிடைத்திருக்கும் கழகமோ, சாமான்யமானதல்ல !

[நூல் — "தம்பிக்கு அண்ணாவின் கடிதங்கள்"]

நாவலர்—நம் கழகக் காவலர் !

நாம் நமது குடும்பத்தின் முழு வலிவும் பூரணப் பொலிவும் திருச்சி மாநில மாநாட்டில் விளங்கிடும் வகையில் கூடிட வேண்டாமா ?

களம் செல்லத் துடிப்போருக்குக் கட்கம் முக்கியமே தவிர, கட்டில் தந்தத்தாலா ? தங்கத்தாலா ? வட்டிலில் பாலா ? தேனா ? வனிதையின் மொழி யாழா ? குழலா என்பதல்ல முக்கியப் பிரச்சினைகள்!

வதைபடும் தாயகத்தைக் காண்கிறோம்—வாழ்வுக் கான வழிவகை காணக் கூடுகிறோம்.

இன்னல்—இழப்பு ஏற்கும் உள்ளம் படைத்தோர் கூடுகிறோம்.

நாவலர் நெடுஞ்செழியனைக் கழகக் காவலராகக் கொண்டு கூடுகிறோம். நாவலர்—நம் கழகக் காவலர்! நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள படை ஒப்புயர்வற்றது, உளத்திண்மை கொண்டது என்பதை உணரத்தக்க அளவிலும் வகையிலும் ஆற்றல் மிக்க தம்பி, நாவலர் !

['திராவிடநாடு' வாரஇதழ்
1955 ஏப்ரல் 8]

தம்பி வா ! தலைமை தாங்க வா !

நமது பொதுச் செயலாளரை, "தம்பி வா ! தலைமை தாங்க வா ! உன்னுடைய ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கிறேன் ; வா !" என்று நான் கூறியது வெறும் அலங்காரத்திற்காக அல்ல ! அந்த நிலை நமது கழகத்தில் வளர்ந்துகொண்டு வருகிறது. அது வளர வேண்டும் என்பதுதான் எல்லோருடைய உண்மையான நம்பிக்கை. அப்படி வளர்ந்தால்தான் நம்முடைய கழகம் நல்ல சனநாயகப் பண்போடு திகழ முடியும்.

நண்பர் நெடுஞ்செழியன் அவர்கள், நமது கழகத்திற்குப் பொதுச் செயலாளராகக் கிடைத்திருக்கிறார்.

அவர் இடுகின்ற ஆணைகளையெல்லாம் ஏற்று நடத்துவதில் நான் பெருமை கொள்ளுகிறேன். நமது தோழர்கள் பெருமை கொள்ள வேண்டும்.

"நாட்டுக்குக் கிடைத்திருக்கும் நாவலரே! கழகத்தைக் கட்டிக் காக்கும் காவலரே! என் தம்பிமார்களில் மூத்தவரே! கழகத்தைக் கட்டிக் காப்பதற்காகப் பொதுச் செயலாளராக ஆக்கப் பட்டிருப்பவரே! தலைவரே! உம்முடைய ஆணைக்குக் கீழ்ப்படிந்து நடக்க நான் என்றும் தயாராக இருக்கிறேன்" என்பதை எடுத்துச் சொல்வதன் மூலம் மற்ற அத்தனை பேரும் அந்த ஆணைக்குக் கீழ்ப்படிந்து நடக்க இருக்கின்றார்கள் என்பதனையும் நான் கூறுகிறேன்.

நாமெல்லோரும் மனமார ஒன்றுபட்டு, நமது மாநில மாநாட்டிற்குத் தலைவராகவும் கழகப் பொதுச் செயலாளராகவும் தோழர் நெடுஞ்செழியன் அவர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம்.

நம் நண்பர்கள் பலரும் நெடுஞ்செழியன் அவர்களைப் பலபடப் பாராட்டிப் பேசினார்கள். அவர்கள் கூறிய அத்தனை உண்மைகளையும் நானும் ஏற்றுக்கொண்டேன் என்பதை, நான் அவர்கள் பேசும் போது மகிழ்ந்திருந்ததைக் கண்டவர்கள் அறிந்திருக்கலாம்.

என்னைவிட அடக்கமானவர் !

என்னைவிட நண்பர் நெடுஞ்செழியன் அவர்கள் அதிகமான அளவுக்கு அடக்க இயல்பு உடையவர்.

எனக்காவது திடீர் திடீரெனக் கோபம் வரும். ஒரு சமயம் அந்தக் கோபத்திற்குப் பலியாகக் கூடியவர் களும் இருக்கலாம். சில பேர் அதைப் பரிகாசமாகக் கருதலாம். சில பேர், "அண்ணாவுக்கு வேறு யார் பேரிலேயோ ஆசை வந்துவிட்டது! அதனால்தான் நம்மீது கோபமாக இருக்கிறார்" என்று எண்ணத் தோன்றலாம்.

நான் சில பேரிடத்தில் கோபப்படுகிறேன் என்றால், அதற்குக் காரணம் அவர்கள் அதனால் நல்வழிக்கு வருவார்கள் என்று எண்ணுவதால்தான் !

ஆனால், அந்த அளவுக்குக்கூடக் கோபித்துக் கொள்வது கிடையாது நண்பர் நெடுஞ்செழியன் அவர்கள்.

புடம் போட்ட தங்கம் நாவலர் !

என்னிடத்தில் உள்ள சில குறைபாடுகள் நீக்கப் பட்ட புடம் போட்ட தங்கம் நாவலர்.

வருகின்ற கடிதங்களுக்கு நான் பதில் போடுவ தில்லை — குறைதான் ! ஆனால், அந்தக் குறை வெகுகாலமாக என்னைக் காப்பாற்றிக் கொண்டு வருகிறது. அதனால்தான் வைத்துக் கொண்டிருக் கிறேன். நண்பர் நெடுஞ்செழியனிடத்தில் அந்தக் குறை கிடையாது.

குறித்த காலத்தில் கூட்டங்களுக்கு நான் வருவதில்லை. ஆனால், நெடுஞ்செழியனோ, குறித்த காலத்தில் கூட்டம் கூட்டாவிட்டால், கூட்டம் கூட்டுவதாகக் கூறியவர்களுக்குக் 'கொறடா' எடுப்பார் இப்படி என்னிடத்தில் உள்ள குறைபாடுகள் நீக்கப் பட்ட புடம் போட்ட தங்கம் நெடுஞ்செழியன்.

நான் ஏழெட்டு ஆண்டுக் காலமாகக் கண்ணும் கருத்துமாகப் பார்த்து — எண்ணி எண்ணிச் சிந்தித்து — ஏக்கத்தோடு பார்த்துப் பார்த்து — இருபத்து நான்கு மணி நேரமும் உடனிருந்து — "காரியங்கள் இப்படி இப்படி நடைபெற வேண்டும் — இப்படி இப்படி நடந்தால்தான் நல்லது" என்றெல்லாம் எடுத்துச் சொல்லி, "இந்த விதைகள் எல்லாம் வளரக்கூடிய நல்லதோர் கழனி" அந்த உள்ளத்தில் இருப்பதைக் கண்டு, என்னுடைய பொறுப்பை — தோழர் நெடுஞ்செழியனிடம் ஒப்படைத்தேன்.

"ஏன் இதற்குள்ளாகக் கழகத்தின் பொதுச் செயலாளர் பொறுப்பிலிருந்து விலக வேண்டும்?" என்று நண்பர்கள் சிலர் கேட்ட நேரத்தில் "இல்லை, கழகம் மிக உயரமாக வளர வேண்டும், நானோ 4 அடி 6 அங்குலம்; உயரமான ஆளிடத்தில் கழகத்தை ஒப்படைக்கிறேன்". என்று எடுத்துச் சொன்னேன்.

நம் நம்பிக்கை எல்லாம் ஈடேறத்தக்க வகையில் பணியாற்றுவதற்கு நாவலருக்கு ஆற்றல் இருக்கிறது.

அவர் கல்லூரியில் படித்த காலம் முதற் கொண்டு ஒழுங்கு முறை தவறாத ஒரு மாணவராக இருந்து வந்தவர்.

தோழர் நெடுஞ்செழியன் எனக்குத் தம்பிதான் — வயதில்! உண்மையில் அவரைத் தம்பி என்று அழைப்பதில் பெருமைப் படுகிறேன்; என்னை அண்ணனாகக் கொண்டிருப்பதில் அவரும் பெருமைப் பட்டிருக்கின்றார்.

[1955 ஆம் ஆண்டு நடைபெற்ற தி. மு. க. இரண்டாவது மாநில மாநாட்டில் பேரறிஞர் அண்ணா ஆற்றிய உரை]

மக்கள் மதிக்கும் தலைவர் நாவலர்!

நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் நாட்டறிந்த நல்ல தமிழ்ப்புலவர்!

நம்முடைய நாவலர் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்துக்கொண்டு இருந்த போதே—நான் அவரை அறிவேன்.

அங்கே தமிழ்மன்றக் கூட்டத்தில் பேசுவதற்காக நான் ஒருநாள் சென்றிருந்தேன், அப்போது நம்முடைய நெடுஞ்செழியன் தமிழ்மன்றச் செயலாளராக வீற்றிருந்தார். இப்போது இருப்பதைவிட இன்னும் துணிச்சலுடனும் மிடுக்குடனும் இருப்பார்; தோற்றத்திலும் கம்பீரம் இருக்கும்!

நல்ல இளமையும் கருகருத்த தாடியும் உள்ள அன்றைய நெடுஞ்செழியனைக் கண்டபோது நிமிர்ந்து தான் பார்த்தேன், காரணம், நான் அவரைவிடக் குள்ளமானவன்! ஆகவே அவர் என்னைக் குனிந்து தான் பார்த்தார்!

நாவலர் அரசியலில் இன்று எவ்வளவு வளர்ந்திருந்தாலும், குனிந்து பார்கும் அந்த உணர்ச்சி இன்னும் இருக்கிறது.

எல்லாம் தெரிந்த அவர், ஏதும் தெரியாதவரைப் போல அடக்க உணர்ச்சியோடு நடந்துகொள்ளும் அந்தப் பண்பு, கழகத்துக்குப் பெருமை தருவதாகும்.

எந்தவித அமளி துமளியும் மனத்திலே எண்ணாமல் கல்லூரியிலே பெறத்தக்க பட்டங்களை யெல்லாம் புகழுடன் பெற்று, இன்று மக்கள் மதிக்கத்தக்க தலைவராக விளங்குகிறார்.

['நம்நாடு' நாளிதழ்
27–7-1964]

நாவலரும் அவரின் துணைவியாரும்!

தோழர் நெடுஞ்செழியன் கல்லூரியிலிருந்து வெளி யேறியதும் எங்காவது கம்பனின் கவித்திறமை பற்றி (கட்டாயத்தாலும்), இளங்கோ அடிகள் பற்றி (விருப்பத்துடனும்) எடுத்து உரைத்துக் கொண்டு, தமிழின் எழிலைக் கண்டும் காட்டியும் பணியாற்றி வருவார் என்றே நான் அப்போது எண்ணிக் கொண்டேன்.

"அது போல நடந்திருக்கக் கூடாதா" என்று ஆயாசத்துடன் கேட்கும் அவர் துணைவியார் தெரிகிறார்கள்! என்ன செய்யலாம்? அவரோ புயலில் குதித்து விட்டார்!

நாவலர் வீட்டுச் சைவம்!

சிறிதளவு என்னிடம் பழகுவதில் கூச்சமுள்ள சுபாவம் நாவலருக்கு—எனவே அவருடைய இல்லத்தை இருப்பிடமாக்கிக் கொண்டால்தான் என் எண்ணங்கள்—நான் சரியென்று கருதும் முறைகள்—என் ஆசைகள்—எனக்குள்ள அச்சங்கள் இவை

பற்றியும்—துணைக் கழகங்கள், துளைக்கும் கழகங்கள், தூது விடும் கழகங்கள், வம்புக்கு இழுக்கும் கழகங்கள் ஆகியவற்றைப்பற்றி என் கருத்து யாது என்பது பற்றியும் உரையாடி உரையாடி எடுத்துக் காட்ட முடியும் என்ற எண்ணத்தால் உந்தப்பட்டு, அவர் வீட்டுச் 'சைவ'த்தைத் தாங்கிக் கொண்டேன்.

அவரிடம் நேரிடையாகக் கூடப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதில்லை — பிரச்சினைகளை மற்ற நண்பர்களுடன் பேசிக் கொண்டிருக்கும் போது அவர் உடனிருப்பார்!

மிக முக்கியமான கட்டங்களின் போது, புன்னகையாவது பிறக்கும் — புருவத்தையாவது நெரிப்பார்! இவ்வண்ணம் இரண்டாண்டுகள் தொடக்கத்திலே நான் கொண்ட நம்பிக்கை, வளர்ந்து கனியாகி விட்டது.

நமது கழகத்தை அதன் கண்ணியம் கெடாத வகையில் மட்டுமல்ல—வளரும் வகையில் நமது நாவலர் நடத்திச் செல்வார் என்ற உறுதியை என்னால் நிச்சயமாக அனைவருக்கும் அளிக்கமுடியும்!

உலகைத் திருத்தவந்த உத்தமர் நாவலர்!

நெடுஞ்செழியன் யார்? கல்லூரிப் படிப்பையும் கணக்கேடுகளையும் வைத்துக் கொண்டு காலம் தள்ளிவிட முடியாதா? இவரைப் போல, ஊருக்கு ஊர் எண்ணற்ற வாலிபர்கள் ஊணையும் மறந்து, உற்ற மனையையும் துறந்து, ஊருக்கு உழைப்பதே

பெரிய பாக்கியம் என்று பணியாற்றிடக் காரணம் என்ன ? இவர்கள் எல்லாம் எதற்காக இப்படி முன்வர வேண்டும் ?

"கனிமரக்காவும் பனிமலர்ச் சோலையும், பறக்கும் சிட்டும் தாவும் மானும், தத்தும் கிளியும் கொத்துத் திராட்சையும், கதலியும் மாவும், கழனியும் அருவியும் நிரம்பிக் கிடக்கும் உலகில் அவரவர்களும் அவரவர்கள் வேலைகளைப் பார்த்துக் கொண்டு போகாமல் ஏனிந்த வேட்டடிபடும் வேலைக்கு வர வேண்டும் ? 'கொள்கை கொள்கை' என்று முழக்கித் துப்பாக்கிக்கோ, ஈரல் குலை நோய்க்கோ ஏன் தங்களை அர்ப்பணிக்க வேண்டும் ? என்ன அவசியம் அதற்கு?" என்று எண்ணிப் பார்த்திடின், உலகைத் திருத்திய உத்தமர் களின் நினைவும், ஒவ்வொரு நாட்டையும் வாழ்விக்க உயிர்களைத் தத்தம் செய்த மாவீரர்களின் பட்டியலும் கவனத்துக்கு வரும் ! அந்த வகையிலே நாவலர் அவர்கள் உலகைத் திருத்த வந்த உத்தமர்களிலே ஒருவராவார் !

[*11-7-1991 — அன்று,*
மாண்புமிகு தமிழக நிதியமைச்சர்
டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ. டி.லிட்.
அவர்களின் 72வது பிறந்தநாள் விழாவின்போது,
தமிழ்நாடு அரசு,
பேரறிஞர் அண்ணா கருத்துமணிகள்
தொகுப்பாசிரியர்
புலவர் இளஞ்செழியன் எம். ஏ. *அவர்கள்*
வெளியிட்டு வழங்கியது.]

வல்லவர் நாவலர் வாழ்க !

கற்றவை மனத்தில் நிற்கும் !
களத்திலே மழையாய்ப் பெய்யும் !
சொற்றிறம் சபையை வெல்லும் !
சோர்விலா உடலின் வேந்தன் !
நற்றிறம் கண்டே அன்றோ
'நாவலர்' என்றார் ! அந்தக்
கொற்றவன் நீடு வாழ்ந்து
குவலயம் காப்ப தாக !

கல்வியிற் புதுமை கண்டார் !
கடுமையாய் உழைத்துழைத்து
நல்லதோர் விளைவும் கண்டார் !
நாட்டவர் மதிப்பும் கண்டார் !
செல்வழி நேர்மை யாகச்
செயல்திறம் சீர்மை யாக
வல்லவ ராக வாழும்
நாவலர் வாழ்வ தாக !

— கவியரசு கண்ணதாசன்

(நாவலரின் 55 - வது பிறந்த நாளுக்கு எழுதியது.)

அண்ணனும் அண்ணியும் பல்லாண்டு வாழி !

அண்ணனும் அண்ணி யாரும்
அன்புகொள் நம் எல் லார்க்கும்
கண்ணெனத் தகுவர் ! கட்டிக்
கரும்பெனத் தகுவர் ! தூய
பொன்னெனத் தகுவர் ! வாசப்
பூவெனத் தகுவர் ! போற்ற
என்னென்ன உண்டோ, இந்த
இருவர்க்கும் உண்டென் பேன்நான் !

அண்ணியார் மருத்து வத்தால்
அகவையில் குறைந்தார் அண்ணன் !
அண்ணனின் மகத்து வத்தால்
அண்ணியார் கீர்த்தி பெற்றார் !
அண்ணியார் எல்லா மாகி,
அண்ணனைக் காக்கின் றார்கள் !
அண்ணனும் அண்ணி யாரும்
ஆண்டுபல் லாண்டு வாழி !

— புலவர் இளஞ்செழியன் எம்.ஏ.

ஜீவன் பிரஸ், சென்னை - 600 005

மாண்புமிகு டாக்டர் நாவலர்,
திருமதி டாக்டர் விசாலாட்சி நெடுஞ்செழியன்
இவர்களின்
மகன் திரு நெ. மதிவாணன்,
மருமகள் திருமதி சரந்தி மதிவாணன்